# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்
உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 38 International Editor : MICHAEL W.SMITH இதழ் - 38


## உன் ஆத்துமா எடுத்துக்கொள்ளப்படும்

லூக் 12 : 16-21 ன் விளக்கவுரை

ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இந்த உலகத்தின் செல்வங்களை தன் எதிர்காலத்திற்கென்று சேர்த்து வைத்தான்.அவனுடைய நிலமும் நன்றாய் விளைந்தது.ஆகவே தன் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு தன் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி, தனக்கு விளைந்த தானியத்தையும், என் பொருள்களையும் அங்கே சேர்த்து வைத்து பின்பு ஆத்துமாவே, உனக்காக அநேக வருசங்களுக்கு அநேகம் பொருட்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்து சொல்லிக்கொண்டான்.

இவன் இப்படி தன் எதிர்கால இலக்குகளை வெற்றிகரமாக முடித்துவிட்டதை எண்ணிக் கொண்டிருக்கையில், பரலோகத்தின் தேவன் அவனை நோக்கி : மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும்.அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்.

உலகப்பிரகாரமான அனைத்து ஆசீர்வாதங்களையும் உடைய அந்த மனிதன் அந்த இரவு மரித்து விட்டான். அவனுடைய செல்வங்களும் ஆஸ்தியும், ஐசுவரியமும் ஒன்றும் தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பதாக அவனோடு கூட வந்து நிற்காது.இந்த ஐசுவரியவானைப் போலவே நித்திய வாழ்வுக்கு ஆயத்தமில்லாதவர்கள் எவர்களோ, அவர்களுடைய முடிவு அந்தகாரப்படும்.

தேவன் அந்த மனிதனை மதிகேடன் என்கிறார்.ஏனெனில் அழிந்துபோகும் இவ்வுலக வாழ்விற்கான திட்டங்களை கண்டறிந்தவன், அழியாத நித்திய வாழ்வுக்கான ஆத்துமாவை காக்க தவறி விட்டான்.இந்த சம்பவத்திலிருந்து இன்று நமக்கு உணர்த்தப்படும் காரியம் என்ன?

தேவனை மறவாதீர்கள்.நித்தியம் என்பது சத்தியம். நீங்கள் மரிப்பது முடிவல்ல.அதுதான் ஆரம்பம். பரலோகம் என்பது மகிமையின் சந்தோசமும், சமாதானமும் நிறைந்த இடம். நீதியுள்ளவர்களுக் கென்று ஆயத்தமாக்கப்பட்டு இருக்கிறது. அதேசமயம் நரகம் என்பது அழுகையும், வேதனையும் நிறைந்த இடம். பாவிகளுக்காக ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது.

எது முக்கியம்.அழிந்து போகும் உலகப் பொருளா அல்லது அழியாத ஆத்துமாவா.சிந்தியுங்கள். மரணம் ஓர்நாள் எல்லோரையும் சந்திக்கும். இளைஞர், முதியோர், பணக்காரர், ஏழை, படித்தவர், படிக்காதோர், பிரபலமானோர், பிரபலமற்றோர் என எல்லா தரப்பு மக்களும் மரணிக்கவும், தேவனை சந்திக்கவும் வேண்டும்.ஏனெனில் வரப்போகும் நித்திய வாழ்வு இவ்வுலக மேன்மையைச் சார்ந்ததல்ல.

ஒரே காரியம் என்னவெனில் நீங்கள் பாவத்தை விட்டு மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அனுதினமும் அவருக்காக வாழ வேண்டும்.

இவ்வுலக ஜனங்கள் அற்பமான இந்த வாழ்வின் ஆஸ்தி, ஐசுவரியம், ஆடம்பரம், கல்வி, மாம்சீக இச்சைகள் போன்ற உலக காரியங்களுக்கே தங்கள் நேரத்தையும், ஆற்றலையும் செலவிடுகின்றனர். இப்போது இருக்கும் உலகவாழ்விற்கான திட்டங்களையே கவனம் செலுத்தி, வரப்போகும் நித்தியவாழ்வுக்கான மகிமையை இழந்து கொண்டிருக்கிறார்கள். நாமும், நாம் வாழும் இந்த சமூகமும் கர்த்தரை மறந்து, இங்குள்ள வாழ்வின் மேன்மைகளையே நோக்கிக் கொண்டிருக்கிறோம். எனக்கு அன்பான சிநேகிதரே – நித்தியம் உங்களுக்கு முன் உள்ளது – அங்கே முடிவே இல்லை. நீங்கள் தேவனை சந்திக்க ஆயத்தமா? உங்கள் வாழ்வை நியாயந்தீர்க்கப் போகிறவருக்கு முன்பதாக நிற்க நீங்கள் ஆயத்தமா?

உங்களுடைய பின்புலம், சமுதாய கௌரவம், அந்தஸ்து, சபை சார்ந்த கேட்பாடுகள் இவை ஒன்றுமே வரப்போகும் அழிவினின்று உங்களை காக்க முடியாது.



**இவ்வுலகில் மேன்மையாக மதிக்கும் காரியங்கள் வரப் போகும் வாழ்வில் எந்த மாற்றத்தையும் தராது**


| | | | | |
|---|---|---|---|---|
| தலையங்கம் | வேதபாடம் மனந்திரும்புதல் | துணை கட்டுரை வேதாகம மனந்திரும்புதல் | கேள்வி & பதில் | உங்களுக்கு தெரியுமா? ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை |
| 3 | 4 | 5 - 6 | 7 | 8 |

# வேதாகமம்,




## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17; 2 பேது 1 : 20-21; மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40; யோவா 14 : 21-23, 1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19; 17 : 30; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7; 2 கொரி 5 : 17; ரோம 6 : 1-4, எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8; 15 : 8-9; 19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75; எபி 12 : 14; 1 பேது 1:15-16; தீத்து 2 : 11-12; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21; ரோம 14 : 17; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47; எபே 4 : 4-6; 1 கொரி 12 : 12-13; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23; கலா 3 : 28; வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20; 26 : 26-30; 1 கொரி 11 : 23-27; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6; லூக் 16 : 18; ரோம 7 : 2-3; 1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10; 1 கொரி 11 : 14-15; உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28 ,29; 2 கொரி 5 : 10; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23,24; எபே 5 : 19; 2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16 : 15

இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, பரிசுத்தமாய், அவருக்கு முன்பதாக ஒவ்வொரு நாளும் வாழ்வதே நித்திய வாழ்வைத் தரும். ஆமோஸ் தீர்க்கதரிசி உன் தேவனை சந்திக்க நீ ஆயத்தப்படு என்கிறார் (ஆமோ 4 : 12). ஐசுவரியமுள்ள அந்த மனிதன் தன் வருங்காலத்தின் ஓய்வுநாட்களுக்காக ஆயத்தமானது தவறில்லை.அதேசமயம் அவன் தேவனை சந்திக்க ஆயத்தப்படவில்லை.ஆயத்தம் என்பது நம்மை தயார்நிலையில் வைத்திருப்பதை குறிக்கிறது. நீங்கள் உங்கள் தேவனை சந்திக்க ஆயத்தமாகி விட்டீர்களா?



**அனுதினமும் ஆத்தும நன்மைக்காக தேவனைப் பிரியப்படுத்தி வாழ்வோம்**

தேவனுடைய நியாயத்தீர்ப்பையும், நித்தியத்துவத்தையும் மனதில் கொண்டுள்ளீர்களா? ஆத்தும நலனில் அக்கறை செலுத்தி அனுதின வாழ்வில் தேவனைப் பிரியப்படுத்தி வாழ்வோம்.நம்மில் அநேகர் ஆத்துமாவைக் குறித்த சத்தியத்தை அலட்சியம் பண்ணுகிறோம்.தேவனைக் குறித்து அறிந்தவர்களும் கூட உலகப்பிரகாரமான அடுத்தடுத்த தேவைகளும், முன்னேற்றத்திற்கும் கொடுக்கும் முக்கியத்துவத்தில் ஆவிக்குரிய காரியங்களுக்குத் தருவதில்லை.நீங்கள் எப்படிப்பட்டவர்களாய் இருக்கிறீர்கள்? வாழ்க்கை நிச்சயமற்றது.நம்மில் ஒருவருக்குமே தெரியாது.நாம் எப்போது மரிப்போம், எப்போது தேவனை சந்திப்போம் என்று.ஆகவே ஒரு மதிகேடனைப் போன்று நாம் வாழ கூடாது. மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? (மத் 16 : 26).

நம்முடைய அனுதின வாழ்வில் தேவனுக்கு முதலிடம் கொடுக்காமல், நித்திய வாழ்வுக்கென்று பிரயாசப்படாமல், எப்படி தேவனுடைய நியாயாசனத்துக்கு முன்பாக நிற்கப் போகிறோம்.நாம் நரக வேதனையினின்று விடுபடும்படிக்கு நாம் என்ன செய்கிறோம்.நம் ஆத்துமா நித்திய வாழ்வுக்கு ஆயத்தமாய் இருக்க வேண்டும்.தேவநீதிக்கும், பரிசுத்த வாழ்வுக்கும் தடையாய் இருக்கிற எல்லாவற்றையும் விட்டு விலக வேண்டும்.கர்த்தரை விட்டு நம்மைப் பிரிக்கிற காரியங்கள் எதுவானாலும் ஐசுவரியமோ, பொழுதுபோக்கோ நாம் அதை விட்டு விலக வேண்டும்.மேலானவைகளை நாடுங்கள்.இன்றே இரட்சண்ய நாள்.இன்றே அநுக்கிரக காலம்.

உங்கள் ஆத்துமாவைக் குறித்து என்ன தீர்மானித்துள்ளீர்கள்? உங்கள் இருதயத்தை தாழ்த்தி, ஜெபம் பண்ணி, அனுதினமும் தேவனேடு ஐக்கியப்படுங்கள்.இயேசுவை உங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொள்ளுங்கள்.காலம் கடைசி காலமாயிருக்கிறது.இயேசுகிறிஸ்து உங்களை எதிர்பார்த்து காத்திருக்கிறார். ■

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க www.thegospeltruth.org என்ற இணையதள முகவரியை பார்க்கவும்.உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள்.படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :–*

**ஆயர்.W.S.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி, பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

Editorial

# ஆசிரியரின் தலையங்கம்

லூக் 22 : 62 – பேதுரு வெளியே போய், மனங்கசந்து அழுதார்.
இயேசுகிறிஸ்துவை மூன்றுமுறை மறுதலித்தார் பேதுரு. அதை எண்ணி அழுதார். அவருடைய உள்ளம் உடைந்தது. என் இரட்சகராம் இயேசுவை நான் மறுதலித்து விட்டேனே என்று மனங்கசந்து அழுதார்.இச்சம்பவம் இதோடு முடிந்து விடவில்லை.இயேசு மரித்தோரிலிருந்து எழுந்ததும், முதலாவது பேதுரு அந்த செய்தியை அறிய வேண்டும் என்றே விரும்பினார்.பேதுரு இயேசுவை மறுதலித்தார்.ஆனால் அவர் ஆவியில் மனங்கசந்து அழுததைக் கண்டு கர்த்தர் அவரை மன்னித்து ஏற்றுக் கொண்டார்.தேவனுக்கே மகிமை உண்டாவதாக

இந்த இதழுக்கான தலைப்பு வேதாகம மனந்திரும்புதல். தேசம், குடும்பம், சபை சார்ந்த மனந்திரும்புதல் ஏற்பட வேண்டும். ஆனாலும் முதன்மையாக தனிப்பட்ட ஒருவரின் மனந்திரும்புதலையே இந்த இதழில் விவரித்துள்ளோம்.

தனிப்பட்ட மனந்திரும்புதலில், திருமண பந்தங்கள் புதுப்பிக்கப்படும் உறவுகள் புதிதாகும்.தவறுகள் திருத்திக் கொள்ளப்படும்.பரிசுத்தம் சூழ்ந்திருக்கும்.தன் பாவத்தை உணராமல் இருப்பதாலேயே இவையெல்லாம் நேரிடவில்லை.சபை போதனைகள் கிறிஸ்துவைப் பற்றினதேயல்லாமல், மனந்திரும்புதலுக்கேற்றவிதமாய் இருப்பதில்லை.உண்மையான தேவமனிதர்கள் மனந்திரும்புதலை வற்புறுத்தி போதிக்க தவறுவதில்லை.தேவனுடைய ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள விரும்புகிற ஜனங்கள் அதற்கு விலைக்கிரயமாய் தேவனுக்கு நாம் செய்யவேண்டியது என்ன என்று ஒருபோதும் சிந்திப்பதே இல்லை.அனுதினமும் பாவத்தை மேற்கொள்ள நாம் ஜெபிக்க வேண்டும்.தேவனிடத்தில் பாவத்தை அறிக்கையிட்டு, ஒப்புரவாகும்போது பரலோக ஈவைப் பெறலாம்.

தேவனால் இரட்சிப்பை பெற்றுக்கொண்டு, ஆசீர்வதிக்கப்பட்ட அநேகம் ஜனங்களை எனக்குத் தெரியும்.மனந்திரும்புதலின் தீவிரத்தை அறிந்து, தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, வாழ்வில் ஜெயம் பெறுவோம். இரட்சிக்கப்பட்ட அனுபவத்தின் வாயிலாக பாவத்தை ஜெயிக்க முடியும்.

நீங்கள் பாவம் செய்பவரானால் இன்னும் இரட்சிக்கப்படவில்லை.மற்றவர்கள் உங்கள் ஆவிக்குரிய வாழ்வை குறித்து என்ன நினைத்தாலும், உங்களுக்குத் தான் தெரியும் நீங்கள் பாவியா, பின் மாற்றமடைந்தவரா, நயவஞ்சகரா அல்லது பரிசுத்தமான தேவமனிதரா என்று.இப்போது தூய மனசாட்சியோடு உங்கள் இருதயத்தை தேவனுக்கு முன்பாக நிறுத்தி , உங்களை நீங்களே சுயபரிசோதனை செய்யுங்கள்.பாவத்தை விட்டு விலகி 100 % உங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். நீங்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர கர்த்தர் உங்களுக்கு உதவிசெய்வார்.இன்றே மனந்திரும்பி ஒப்புக்கொடுங்கள்.

ஆன்லைனில்
அதிகமாக தெரிந்துகொள்ள
www.thegospeltruth.org
பதிவுசெய்து
வெளியீட்டு காப்பகங்களுக்குள்
உள்நுழைக

**என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு சேமத்தைக் கொடுப்பேன்.**

**– 2 நாளா 7 : 14**



# வேதபாட வழிகாட்டி

## பொருள் : மனந்திரும்புதல்

**வேத வாசிப்பு :** உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள். அப்போ 3 : 19

**வரையறை :**

**மனந்திரும்பு :** ஒருவருடைய மனதை மாற்றுதல், இருதயத்தில் மாற்றம், கடந்த காலபாவங்களைக் குறித்த வெறுப்பு உணர்வு

**மனந்திரும்புதல் :** தவறு செய்தமைக்கு மனதார வருந்துதல், பாவத்தை விட்டு திரும்பி, தேவனைப் பிரியப்படுத்துதல்.

**சுருக்கம் :** எல்லோரும் மனந்திரும்பி, குணப்பட வேண்டும் என்று கர்த்தர் கூறுகிறார்.பரிசுத்த குலைச்சலான காரியங்களை விட்டு விட்டு இயேசுவின் பரிசுத்தத்தை பின்பற்றி நடவுங்கள்.மனந்திரும்புதல் இல்லாமல் உண்மையான இரட்சிப்பைப் பெற முடியாது.

### I.யார் மனந்திரும்ப வேண்டும்

**A.**மத் 9 : 12 -13 பாவிகள்

**B.** அப் 17 : 30 எங்குமுள்ள மனுஷரெல்லாரும்

### II. மனந்திரும்புதலைக் குறித்துப் பிரசங்கித்தல்

**A.**லூக் 3 : 3 யோவான்ஸ்நானன் – பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்பும்படி பிரசங்கித்தார்

**B.** மாற் 1 : 14-15 இயேசு – மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்

**C.**மாற் 6 : 12 சீஷர்கள் – மனந்திரும்புங்கள் என்று பிரசங்கித்தார்கள்

**D.**அப் 20 : 20-21 பவுல் – தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்துப் பிரசங்கித்தார்

### III. மனந்திரும்புதலைக் குறித்துப் பிரசங்கித்தல்

**A.**லூக் 13 : 3 மனந்திரும்பாமற் போனால் எல்லோரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்

**B.** அப்போ 3 : 19 உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும் பொருட்டு மனந்திரும்பி குணப்படுங்கள்

**C.** வெளி 2 : 5 கர்த்தருடைய ஆசீர்வாதங்களையும், அபிசேகத்தையும் இழந்து போகாதபடி

### IV. மனந்திரும்புதலுக்கேற்ற கனி

**A.**லூக் 3 : 8 மனந்திரும்புதலுக்கேற்ற கனி கொடுங்கள்

**B.** அப்போ 26 : 19-20 மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளை செய்யுங்கள்

**C.** யாக் 4 : 8 பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்.

### VI. மனந்திரும்புதலின் குணம் : துக்கம்

**A.**2 கொரி 7 : 9 -11 தேவனுக்கேற்ற துக்கம் அடைந்தீர்கள்.

**B.** சங் 51 : 17 நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயம்

### VII. மனந்திரும்புதலின் குணம் : அறிக்கையிடுதல்

**A.**1 யோவா 1 : 9 நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட வேண்டும்

**B.** நீதி 28 : 13 பாவங்களை அறிக்கைசெய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்.

### VIII. மனந்திரும்புதலின் குணம் : விட்டு விடுதல்

**A.** ஏசா 55 : 6-7 துன்மார்க்கன் தன் வழியை விட்டு கர்த்தரிடத்தில் திரும்பக் கடவன்

**B.** எசே 18 : 30 உங்களுடைய எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புங்கள்.

### X. மனந்திரும்புதலின் குணம் : அசுத்தமானவைகளினின்று விலகுங்கள்

**A.** 2 கொரி 6 : 14 – 18 பிரிந்து போங்கள்

**B.** எசே 14 : 6 உங்கள் நரகலான விக்கிரகங்களை விட்டுத் திரும்புங்கள்.

### IX. மனந்திரும்புதலின் குணம் : திரும்ப கொடுத்தல்

**A.** லேவி 6 : 4-5 எடுத்துக் கொண்டதை திரும்ப கொடுக்க கடவன்

**B.** லூக் 19 : 8-9 சகேயு அநியாயமாய் வாங்கினதை திரும்ப செலுத்துகிறேன் என்றார்.

### X. மனந்திரும்புதலின் உவமைகள்

**A.** லூக் 15 : 21 கெட்ட குமாரன்– பரத்துக்கு விரோதமாக நான் பாவஞ் செய்தேன்

**B.** லூக் 18 : 13 ஆயக்காரன் – தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்

**C.** யோனா 3 : 8 நினிவே – அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள்

### XI. மனந்திரும்புதலுக்கேற்ற அழைப்பு

**A.** அப் 2 : 37 – 40 மனந்திரும்பி... உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள்

**B.** வெளி 3 : 19 நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு

### I. மனந்திரும்புதலுக்கான சந்தர்ப்பம்

**A.** வெளி 2 : 21 கர்த்தர் மனந்திரும்பும்படியாய் தவணை கொடுக்கிறார்.

**B.** 2 கொரி 6 : 2 இப்பொழுதே இரட்சண்ய நாள்

**C.** ரோமர் 2 : 4 தேவனுடைய நற்குணம்

**D.** 2 பேது 3 : 9 ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும்

**முடிவு :**

மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோசம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். – லூக்கா 15 : 7

காஸ்பெல் ட்ரூத்

# வேதாகம
# மனந்திரும்புதல்

**பாவத்தைவிட்டு மனந்திரும்புங்கள்.தீமையை வெறுத்து, தேவனுடைய வல்லமையினால் இரட்சிக்கப்படுங்கள். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் எங்கெல்லாம் பிரசங்கிக்கப்படுமோ அங்கே உண்மையான மனந்திரும்புதலும் போதிக்கப்படும். மனந்திரும்புதல் இல்லாமல் உண்மையான இரட்சிப்பு இல்லை.**



### திரும்புதல்

கடந்தகால பாவங்களை விட்டு விலகி கிறிஸ்துவினிடம் வருவதே மனந்திரும்புதல்.தீமையான யாவையும் விட்டு விலகி மீண்டும் அதற்குள்ளே போகாதபடி திரும்புதல். மனந்திரும்புதல் என்பது மாற்றம்.இயேசுகிறிஸ்து நாம் செய்த தப்பிதங்களுக்காகவும், பாவங்களுக்காகவும் சிலுவையிலே அறையப்பட்டார் என்று போதிக்கும் சில கிறிஸ்தவ சபைகளில், மனந்திரும்புதல் வலியுறுத்தப்படுவதில்லை. இயேசுவை ஏற்றுக்கொள்வது மாத்திரமல்ல, தேவன் விரும்பாத காரியங்களை நாம் விட்டு விட வேண்டும். இரட்சிப்பு என்பது நற்கிரியைகளினால் கிடைப்பது அல்ல.மாறாக அது தேவனுடை ஈவு.அதை பெற்றுக்கொள்ளும் கடமை நம்முடையது. அப்போஸ்தலனாகிய பேதுரு ஜனங்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி குணப்படுங்கள் (அப் 3 : 19). யாரெல்லாம் மனதார தேவனிடத்தில் மன்னிப்பு கேட்டு, மனந்திரும்புகிறார்களோ அவர்களை தேவன் மன்னிப்பார்.

இயேசு இந்த பூமிக்கு வந்து மரித்து உயிர்த்ததினாலே நம்முடைய பாவங்கள் நீங்கி, நாம் சுத்திகரிக்கப்பட்டோம். எல்லோரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி (ரோமர் 3 : 23). நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் (மத் 9 : 13) .இயேசுகிறிஸ்து எங்குமுள்ள மனுஷர் யாவரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்புகிறார் (அப் 17 : 30). மனந்திரும்புதலுக்கென்று ஒவ்வொருவரும் அழைக்கப்பட்டுள்ளார்கள். இடறுதலினாலும், பாவத்தினாலும் தேவனை விட்டுப் பிரிக்கப்பட்ட நாம் செய்த தவறை வெறுத்தால் தான், இரட்சிப்படைய முடியும்.

### சுவிசேச வார்த்தையின் முழுமை

மனம் திரும்புதல் குறித்த பிரசங்கம் என்பது ஒரு முறை மட்டும் பிரசங்கித்து விட்டு போவது அல்ல யோவான்ஸ்நானன் மனந்திரும்புதல் குறித்தும் ஞானஸ்நானத்தை குறித்தும் லூக் 3 : 3 ல் கூறுகிறார். காலம் நிறைவேறிற்று மனந்திரும்பி சுவிசேசத்தை விசுவாசியுங்கள் என்றார். (மாற் 1 : 14 -15). சீசர்கள் புறப்பட்டுப்போய் மனம் திரும்புங்கள் என்று பிரசங்கித்தார்கள். (மாற் 6 : 12). அப்போஸ்தலராகிய பவுல் தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்தும் பிரசங்கித்தார் (அப்போ 20 : 21). பாவம் செய்யாமல் வாழ முடியாது என்று சொல்லி பல கிறிஸ்தவ சபைகள் போதிக்கிறது. இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். சுவிசேசத்தின் வல்லமையை (யோவான் 8 : 11) ல் பாவியான ஸ்திரீயை நோக்கி : நீ போ, இனி பாவம் செய்யாதே என்றார். இதிலிருந்து காணலாம் . பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே (எபி 12 : 14).

### இரட்சிப்பின் அவசியம்

நித்திய வாழ்வைப் பெற மனந்திரும்புதலும், இரட்சிப்பும் அவசியம்.லூக் 13 : 3 ல் நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள். ஆவிக்குரிய சபையில் ஐக்கியம் கொண்டு, ஆராதனையில் பங்கு பெற்றால் மாத்திரம் போதாது. நீங்கள் மனந்திரும்பி குணப்படாவிட்டால் பிரயோஜனம் இல்லை (அப்போ 3: 19) .பின் மாற்றமடைந்த ஒவ்வொருவரும் மனம் திரும்பாவிட்டால் கர்த்தருடைய அபிசேகமும் ஆசீர்வாதமும் அவர்களை விட்டு எடுபட்டுப் போகும். எபேசு சபைக்கு எழுதிய நிருபத்தில், மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; நீ மனந்திரும்பாத பட்சத்தில், உன் விளக்குத் தண்டை அதனிடத்தினின்று நீக்கி விடுவேன் (வெளி 2 : 5) .யோவான்ஸ்நானன் பரிசேயர்களைக் குறித்து மனந்திரும்புதலுக் கேற்ற கனிகளைக் கொடுங்கள். ஆபிரகாம் எங்களுக்கு தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லத்தொடங்காதீர்கள் (லூக் 3 : 8). நம்முடைய தகுதியும், அங்கீகாரமும் மனந்திரும்புதலுக்குத் தேவையில்லை. சபை அலுவலகங்களில் பணி செய்பவர்கள் தங்களை தாழ்த்தி தேவனிடத்தில் மன்றாட வேண்டும்.

போதகர்கள், பாடகர்கள், பிரசங்கிப்போர் தங்களது தனிப்பட்ட பாவங்கள், குழுவாக சேர்ந்து செய்த தவறுகளுக்காக மனந்திரும்பி குணப்பட வேண்டும். இல்லை என்றால் அவர்களுடைய ஆத்துமாவை அழிவிலிருந்து காக்க முடியாது. மனந்திரும்புதல் ஒன்றே நோக்கம். இருதயத்திலும் மனதிலும் மாற்றம் வரவேண்டும். அவர்கள் மனந்திரும்பி குணப்பட வேண்டும் என்று அறிவித்தேன் (அப் 26 : 20) . உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள். (யாக் 4 : 8). உங்கள் இருதயங்களை பரிசுத்த மாக்குங்கள்.

## தேவனுக்கேற்ற துக்கம்



மனந்திரும்புதல் என்பது பன்முகத்தன்மை கொண்டது. தேவனுக்கேற்ற துக்கம் என்பது மனந்திரும்புதலினால் வரும் இரட்சிப்பை வலியுறுத்துகிறது.தேவனுக் கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக் கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது (2 கொரி 7 : 10 –11) . தேவனுக்கேற்ற துக்கம் என்பது நாம் வாழும் இவ்வுலகில் நாம் காணும் துக்கங்களுக்கு மேற்பட்டது. தேவனுக்கேற்ற துக்கம் ஆழமாயிருப்பதினால், மனதார மன்னிப்பு கேட்டு, மனந் திரும்ப வேண்டியது மாற்றத்திற்கு வழி வகுக்கும்.

**மனந்திரும்புதல் என்பது இதயத்தையும் மனதையும் ஆக்கிரமித்துள்ள நவீன கால விக்கிரகங்களை விட்டு திரும்புதலைக் குறிக்கிறது.**

தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான் தேவனே நொறுங்குண்டதும் நறுங்குண்டதுமான இருதயத்தை புறக்கணியீர் (சங்கீதம் 51 : 17) .

## அறிக்கையிடுதலும், மன்னிப்பு பெறுதலும்

மனந்திரும்புதல் என்பது பாவத்தை அறிக்கையிடுதலும் மன்னிப்பை பெறுதலும். மனந்திரும்புதல் இல்லாமல் பாவ மன்னிப் பில்லை. 1 யோவான் 1 : 9 சொல்கிறது நம்முடைய பாவங்களை நாம் அறிக்கை யிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான் (நீதி 28 : 13) . பாவத்தை அறிக்கையிடுவது அல்ல, அதை விட்டுவிடுவது தான் முக்கியம். அநேகர் அறிக்கையிட தயாராக உள்ளனர்.

ஆனால் அதை விட்டுவிட பிரியப்படுவதில்லை துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக் காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார். (ஏசாயா 55 : 7). ஆகையால் இஸ்ரவேல் வம்சத்தாரே, நான் உங்களில் அவனவனை அவனவன் வழிகளுக்குத் தக்கதாக நியாயந்தீர்ப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; நீங்கள் மனந்திரும்புங்கள், உங்களுடைய எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புங்கள்; அப்பொழுது அக்கிரமம் உங்கள் கேட்டுக்குக் காரணமாயிருப்பதில்லை (எசே 18 : 30) . உங்கள் மீறுதல்களை விட்டு மனந்திரும்பா விட்டால், பாவம் உங்களை மேற்கொண்டு விடும்.

தீமையான எல்லா காரியங்களையும் விட்டு விலக வேண்டும். பவுல் கொரிந்து சபைக்கு எழுதிய நிருபத்தில் நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய் அசுத்தமானதை தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (2 கொரி 6 : 14 – 18). அதேபோல் எசேக்கியேல் தீர்க்கதரிசி ஜனங்களுக்கு அறிவுறுத்தியது யாதெனில் உங்கள் நரகலான விக்கிரகங்களை விட்டு திரும்புங்கள். (எசே 14 : 6). தற்போதைய நவீன கால விக்கிரகங்களாக கருதப்படுகின்ற பண ஆசை, அலங்கரிப்பு, விளையாட்டு, பொழுதுபோக்கு இதுபோன்ற காரியங்களுக்கு அடிமைப்பட்டு இருக்கும் மக்களை குறிக்கும்.

## சரியானதை செய்யுங்கள்.

திருப்பி செலுத்துதல் என்பதும் மனந்திரும்புதலின் ஒரு கனி ஆகும். சகேயு அநியாயமாய் வாங்கினதை நாலத்தனையாகத் திரும்ப செலுத்துகிறேன் என்றார். ஆகவே இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது (லூக் 19 : 8 – 9) என்று இயேசு கூறினார். திரும்புதல் என்பது கடந்த காலங்களில் நாம் செய்த தவறுகளை விட்டு மனம் மாறி நற்கிரியைகளை செய்ய பழகுதல்

வேதத்தில் மனந்திரும்புதல் குறித்த அழகான உவமை கூறப்பட்டுள்ளது. கெட்ட குமாரன் தகப்பனை நோக்கி பரத்துக்கு விரோதமாக பாவம் செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான் (லூக் 15 : 21). அதேபோல் ஆயக்காரனின் ஜெபம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஏனெனில் அவன் தன் கண்களை வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தேவனே ! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான் (லூக் 18 : 13).நினிவேயின் மக்கள் மனந்திரும்பி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டு திரும்பினதினிமித்தம் தேவனுடைய இரக்கம் கிடைத்தது (யோனா 3 : 8) .அவள் மனந்திரும்பும்படியாய் அவளுக்கு தவணை கொடுத்தேன் (வெளி 2 : 21) என்றும் கூறப்பட்டுள்ளது. ஏனெனில் மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் (லூக் 15 : 7). ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக் கிறார் (2 பேது 3 : 9).

## இன்றே மனந்திரும்புங்கள்.

கர்த்தருடைய நீடிய பொறுமையானது நியாயத்தீர்ப்பின் நாளில் முடிவடையும். பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு பிரசங்கம் செய்கையில், நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் (அப் 2 : 38). இன்றைய தலைமுறைக்குத் தேவையான சுவிசேசம் இதுவே. இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம். இப்பொழுதே இரட்சணிய நாள் (2 கொரி 6 : 2) உண்மையான சந்தோசம் மனந்திரும்புதலில் தான் கிடைக்கும். ■

# கேள்விக்கு என்ன பதில்?

**" இரட்சிப்புக்கேற்ற மனந்திரும்புதல் இல்லாதவர்களுக்கு கர்த்தருடைய கிரியைகள் போதாதது போல தோன்றும் "**

### இரட்சிப்புகேற்ற மனந்திரும்புதலின் மதிப்பு என்ன?

இயேசு மனந்திரும்பி, சுவிசேசத்தை விசுவாசியுங்கள் என்றார் (மாற் 1 : 15) . சிலுவையில் இயேசுகிறிஸ்து சம்பாதித்து நமக்கு ஈந்ததுதான் இரட்சிப்பாகிய மீட்பு. அவர் நம்முடைய பாவங்களை மன்னித்து, விலைமதிப்பற்ற நித்திய வாழ்வைத் தர ஆயத்தமாய் இருக்கிறார். பாவத்தை அறிக்கையிட்டு மனந்திரும்புகிற வர்களுக்கு மட்டும்தான் அந்த பரலோக பாக்கியம்.

**உண்மையான மனந்திரும்புதல் இல்லாமல் இரட்சிப்பை பெற விரும்பும் ஜனங்கள் சிலர் தடுமாறும் அனுபவத்திற் குள்ளாகிறார்கள்**

சிலர் இரட்சிப்பை தேடி தேவனிடத்தில் வருவார்கள். ஆனால் தேவனுக்கேற்ற மனந்திரும்புதலில் நிலைத்திருக்க மாட்டார்கள்.

வாழ்க்கையில் எவ்விதமான உண்மையான மாற்றங்களையும் அடைந்திருக்க மாட்டார்கள். பாவத்தை விட்டு விலகி, கிறிஸ்துவைப் பின்பற்றும் மேலான நோக்கமுடையவர்களாக இருக்க வேண்டும். ஐசுவரியமுள்ள ஒரு இளைஞன் இயேசுவைப் பின்பற்ற வாஞ்சித்தான். அதனால் தனக்குண்டான யாவற்றையும் விற்று தரித்திரருக்கு கொடுக்கும்படி அறிவுறுத்தப்பட்டது. இங்கே அவனுடைய கீழ்ப்படிதல் எனும் மனந்திரும்புதலின் கனியானது சோதிக்கப்பட்டது. மேலும் கர்த்தருக்காக அவன் எதையாகிலும் விட்டு விட மனதாயிருக்கிறானோ என்றும் அறியப்பட்டது.

துரதிஸ்டவசமாக, அந்த மனிதன் இவ்வுலகத்தின்பால் பற்றுக் கொண்டு தேவனை கிட்டிச் சேரவில்லை. அடிக்கடி ஜனங்கள் தேவனிடத்தில் தாம் கொண்டிருக்கும் விசுவாசத்தை அறிக்கையிடுகிறார்கள். ஆனால் இன்னும் பாவத்திலேயே வாழ்கிறார்கள். இவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் அல்ல. மாறாக இவர்களுடைய இருதயம் மாறவில்லை. தடுமாறும் மனமுடையவர்கள். பொல்லாத வழிகளும் தேவனுக்கேற்ற துக்கமும் தேவனை சஞ்சலப்படுத்த காரணமாகி விடுகிறார்கள். கடந்தகால பாவங்களை விட்டுவிட ஒரு ஆசை இருக்க வேண்டும். இல்லை யென்றால் அதே பாவங்கள் படர்ந்து பெரிதாகி அவர்களை பின்மாற்றம் அடையச் செய்து விடும்.

சிலர் இரட்சிப்பின் கிரியைகளில் மகிழ்வது இல்லை. ஏனெனில் முழுமையான மனந்திரும்புதல் அவர்களிடத்தில் இல்லை. நீங்கள் மீட்கப்பட வேண்டுமானால், பாவத்தை ஜெயிக்க வேண்டும்.

பாவியாகிய ஒரு மனுஷன் முதலாவது தேவனிடத்தில் தன் இருதயத்தை திறந்து எல்லா பொல்லாப்பையும் அறிக்கை செய்ய வேண்டும். அப்போது தேவனால் ஒரு வழி மீட்படையும் படியாக உருவாக்கப்படும். அதுதான் நாம் இரட்சிக்கப்பட்டு, புதுவாழ்வடையும் வழி. உன் சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசுவை பின்பற்று. தேவனுடைய கிருபைகளை, பரிபூரணமாய் பெற, மனந்திரும்பி, தேவனண்டையில் நில்லுங்கள்.

### என் பாவத்தை குறித்து வருந்துவதுதான் மனந்திரும்புதலா?

இல்லை. மனந்திருந்தாத ஒரு நபர் தன் பாவத்தைக் குறித்து தவறு என்று எண்ணலாம். அதற்காக வருத்தப்பட்டாலும் அவரிடத்தில் எந்த ஒரு மாற்றமும் இல்லாமல் தொடர்ந்து அதே பாவத்தை செய்வார். ஒரு குடிகார கணவன் குடிபோதையில் இருக்கும்போது, தன் மனைவிக்கு செய்த கொடுமைகளுக்காக அழுது புலம்புவார். போதை தெளிந்ததும் மறந்து விடுவார். மீண்டும் குடிபோதையில் அதே கதையை திரும்ப சொல்வார். இதுதான் லௌகீக துக்கம்.

ஆனால் தேவனுக்கேற்ற துக்கம் (2 கொரி 7 : 10) மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. பாவம் கழுவப்பட்ட பரிசுத்த மனுசர்களும் கூட சில சமயங்களில் தான் பாவம் செய்துவிட்டோம் என்று ஏவப்படுவதனால் மீண்டும் கர்த்தரிடத்தில் மன்னிப்பை பெற்றுக் கொள்கின்றனர். எப்படியானாலும், வெறும் குற்ற உணர்வும், கண்ணீரும் போதாது. மீண்டும் பாவ வாழ்விற்குள் பிரவேசிக்காத எண்ணம் தேவனுக்கேற்ற துக்கத்தை அறிந்து செயல்பட வேண்டும். அதுவே உண்மையான மனந்திரும்புதல்.

**Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section**

**TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY**

உங்களுக்குத் தெரியுமா?

நினிவே 40 நாட்களில் கவிழ்க்கப்பட்டு போகுமென்று யோனா தீர்க்கதரிசி உரைத்த போது அங்குள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசம் பண்ணினார்கள்.நினிவேயில் வாழ்ந்த எந்த மனிதரும் மிருகஜீவன்களும் கூட உண்ணவும், குடிக்கவும் இல்லை .மனுஷரும், மிருகங்களும் இரட்டுடுத்திக் கொண்டார்கள். இதுதான் பொல்லாத வழியை விட்டு அவர்கள் மனம்திரும்பினதற்கான அடையாளம். எனவே நினிவே காப்பாற்றப்பட்டது (யோனா 3 : 4 - 10).

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## தேவனுடைய நற்குணம்

தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடியசாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணுகிறாயோ? ரோமர் 2 : 4

தேவனுடைய நியாயத்தீர்ப்பினின்று ஒருவரும் தப்ப முடியாது. நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போம் (ரோமர் 14 : 10) . ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்கு கணக்கொப்புவிப்பான். கர்த்தர் நீடிய பொறுமை உள்ளவராய் இருந்து, நமக்கு கொடுத்திருக்கிற இந்த நாட்களை வீணாக்காமல் நித்திய வாழ்வை பெற வாஞ்சிப்போம். பொல்லாத மனுசர்கள் மனந்திரும்பும் பொருட்டு, சமுதாயத்தில் வாழும் அனைத்து தரப்பு மக்களையும் அவருடைய அன்பின் கரம் அரவணைக்கும். கைவிடப்பட்டோர், ஒதுக்கப்பட்டோர், மோசமான பாவிகள் யாவர்மேலும் அன்பு கூர்ந்து, அவர்களுக்காக பரிதவிக்கிற தேவன் அவர். தேவனுடைய நீடிய பொறுமை அன்பு



இரட்சிப்பின் திட்டம் இதையெல்லாம் அசட்டை பண்ணி தேவனுடைய நற்குணத்தை ஏற்றுக்கொள்ளாத அநேகர் நம்மில் உண்டு. மெய்யாக தேவனுடைய நற்குணமே நம்மை மனந்திரும்ப வழிவகுக்கிறது. ஒருவருடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டு விட்டால், அநாதி தேவனின் அன்பு, நித்திய வாழ்வு, இதினிமித்தம் இருதயத்தில் வருகிற ஒரு மாசற்ற தூய மகிழ்ச்சியை உணர முடியும்.

நாம் தேவனுக்கு விரோதமான கலகக்காரராய் இருந்தால், அன்பு, நீடிய பொறுமை, இரக்கத்தைப் பெற முடியாது. நாம் தேவனை வெறுத்தாலும் அவர் பாவிகளை நேசிக்கிறார். அவர் தம்முடைய நீடிய பொறுமையினிமித்தம் தம்மை நோக்கி வேண்டிக்கொள்கிறவர்களுக்கு இரக்கம் பாராட்டுகிறார். அவருடைய நியாயத்தீர்ப்பை தாமதப்படுத்தி, அவருடைய நீடிய தயவினிமித்தம் தண்டனையின் பிரம்பை நம்மை விட்டு அகற்றினார். விழுந்து போகிற மனுக்குலத்திற்கு அவருடைய நற்குணத்தின் ஐசுவரியம் திரளாய் உள்ளது.

ஏன் கர்த்தர் நீடிய பொறுமை உள்ளவராக இருக்கிறார்? தகுதியற்ற மனிதர்களாகிய நம்மேல் ஏன் அவர் தயவு பாராட்ட வேண்டும்? தேவ தயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறது (ரோமர் 2 : 4). அவருடைய தயவு, அன்பு, ஜனங்களை அவரை நோக்கி வர ஏவுகிறது.தேவனுக்குப் பிரியமானவைகளை செய்ய தீர்மானிக்கிறது.
மனந்திருந்திய இருதயத்திற்கு திரளான இரக்கங்களும் மன்னிப்பும் உண்டு .தேவ தயவுக்காக அவரைத் துதிப்போம்.

**CONTACT :-**

**The Editor,**
**Gospel Truth,**
**P.O. Box - 54**
**Pollachi Town**
**INDIA - 642 001.**

**Email :**
**vedhacog1954@gmail.com**

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

**THE CHURCH OF GOD** *Worship Place:*

**Church Street, Kolarpatti, Pollachi - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - 642 107**

**SUNDAY SERVICE : 10 AM - ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த சபைக்கும் போகாதவர்கள் எங்களுடன் பரிசுத்த ஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

**Come & Worship with Real Truth**

**Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 -KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107. Phone : 04259 - 280488 Cell : 95975 62641.**

**Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan**

**Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316**